பக்கங்கள்:-19

# காலை முரசு

| முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2055 | ஐப்பசி 28 | புதன்கிழமை | 13.11.2024 | அதிர்வு 103 |
| --- | --- | --- | --- | --- | --- |


## ஆனையிறவு சோதனைச் சாவடி அகற்றப்பட்டது!



கிளிநொச்சி – ஆனையிறவில் கடந்த 17 வருடங்களாக அமைக்கப்பட்டிருந்த 06




06

# அமைதியான தேர்தலை நடத்த அனைவரும் ஒத்துழையுங்கள்!

## தேர்தல் ஆணைக்குழு வேண்டுகோள்

“அமைதியான முறையில் நாடாளுமன்றத் தேர்தலை நடத்துவதற்கு ஒட்டுமொத்த மக்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். தேர்தலை சிறந்த முறையில் நடத்துவதற்கு சட்டத்தை முழுமையாக செயற்படுத்துமாறு பாதுகாப்பு தரப்புக்குப் பணிப்புரை விடுத்துள்ளோம். சட்டவிரோதமான முறையில் செயற்படுவதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். வாக்கு உங்களின் உரிமை மற்றும் பலம். அந்த உரிமையை நாளை வியாழக்கிழமை சிறந்த முறையில் பயன்படுத்துங்கள். அத்துடன் சட்டம் மற்றும் ஒழுங்கையும் பாதுகாக்க ஒத்துழையுங்கள்.”

– இவ்வாறு தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க நாட்டு மக்களிடம் கேட்டுள்ளார். 05

## 70 ஆயிரம் பொலிஸார் பாதுகாப்புக் கடமையில்



நாடாளுமன்றத் தேர்தலை முன்னிட்டு நாடு முழுவதும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதுடன், 05




ஓர் ஊடகம் அல்லது நிறுவனம் தன் பெயரைப் பதித்து, முன்னேறி, மேலெழுந்து வந்தால் அந்தப் பெயரைப் பயன்படுத்தி குசும்பு பண்ணுவதில் நம்மவர்கள் பெரும் கெட்டிக்காரர்கள்.

பொதுவாக ஊடகங்களின் பெயர்கள் மட்டுமல்லாமல் நிறுவனங்களின் பெயர்களும் அந்தந்த நாடுகளில்பதிவுசெய்யப்பட்டிருப்பதால்வெளிநாடுகளில்அந்தப்பெயர்களைஅசாதாரணமாக பயன்படுத்துவதில் சிக்கல் இருப்பதில்லை.

நாட்டில் – தாயகத்தில் – ஒரு நிறுவனத்தில் வேலை செய்த உரித்து, உரிமை கருதி அந்தப் பெயரை புலம்பெயர் தேசத்தில் பயன்படுத்துவது வேறு. தாயகத்தில் அந்தப் பெயருக்கு இருக்கின்ற மவுசை – ‘கிரெடிட்டை’ – 05

# 12 வாக்களிப்பு நிலையங்கள் யாழ்ப்பாணத்தில் இடமாற்றம்



யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் 12 வாக்களிப்பு நிலையங்கள் புதிய இடங்களுக்கு மாற்றப்பட்டுள்ளன என்று யாழ். மாவட்ட அரச அதிபரும் மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலருமான மருதலிங்கம் பிரதீபன் அறிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் வாக்களிப்பு நிலையங்களாக இயங்கிய 12 நிலையங்களே இவ்வாறு மாற்றப்பட்டுள்ளன.

இதன்படி, ஊர்காவற்றுறை தேர்தல் தொகுதியில் வேலணை மத்திய கல்லூரி விடுதி வாக்களிப்பு நிலையம் சரவணை பள்ளம்புலம் முருகமூர்த்தி ஆலய நால்வர் மணிமண்டபத்துக்கும், நாரந்தனை தெற்கு பொது நோக்கு மண்டப வாக்களிப்பு நிலையம் நாரந்தனை தெற்கு கிராம சக்தி பொது மண்டபத்துக்கும் மாற்றப்பட்டுள்ளன.

வட்டுக்கோட்டை தேர்தல் தொகுதியில் வடலியடைப்பு சைவப்பிரகாச வித்தியாலய மண்டப இலக்கம் 1 வாக்களிப்பு நிலையம் வடலியடைப்பு சனசமூக நிலையத்துக்கும், அராலி வடக்கு அமெரிக்க மிஷன் பாடசாலை வாக்களிப்பு நிலையம் அராலி இந்து கல்லூரிக்கும் மாற்றப்பட்டுள்ளன.

காங்கேசன்துறை தேர்தல் தொகுதியில் வயாவிளான் மத்திய கல்லூரி மண்டப இலக்கம் 2 வாக்களிப்பு நிலையம் பலாலி வடக்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலைக்கு மாற்றப்பட்டுள்ளது.

மானிப்பாய் தேர்தல் தொகுதியில் தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை மண்டப இலக்கம் 1 வாக்களிப்பு நிலையம் தாவடி தெற்கு சனசமூக நிலையத்துக்கு மாற்றப்பட்டுள்ளது.

கோப்பாய் தேர்தல் தொகுதியில் அச்சுவேலி மத்திய கல்லூரி மண்டப இலக்கம் 2 வாக்களிப்பு நிலையம் அச்சுவேலி ஆரம்பப் பாடசாலைக்கும், அச்சுவேலி விக்னேஸ்வரா சனசமூக நிலைய வாக்களிப்பு நிலையம் விக்னேஸ்வரா முன்பள்ளிக்கும் மாற்றப்பட்டுள்ளன.

உடுப்பிட்டி தேர்தல் தொகுதியில் இமையாணன் மாந் தோட்ட சிவஞான வைரவர் ஆலய மண்டப வாக்களிப்பு நிலையம் உடுப்பிட்டி பலநோக்கு கூட்டுறவு சங்கத்துக்கும், கரணவாய் சக்கலாவத்தை பொது நோக்கு மண்டபத்தில் இயங்கிய வாக்களிப்பு நிலையம் கொற்றாவத்தை செட்டித் தறை சித்தி விநாயகர் ஆலய கல்யாண மண்டபத்துக்கும் மாற்றப்பட்டுள்ளன.

நல்லூர் தேர்தல் தொகுதியில் கொக்குவில் மேற்கு கிறிஸ்தவாலய தமிழ்க் கலவன்பாடசாலை மண்டப இலக்கம் 1 இல் இயங்கிய வாக்களிப்பு நிலையம் வீரமாபிடாரி அம்பாள் ஆலய மண்டபத்துக்கும், நாவலர் கலாசார மண்டபத்தில் இயங்கிய வாக்களிப்பு நிலையம் அத்தியடி கணபதி கலாசார மண்டபத்துக்கும் மாற்றப்பட்டுள்ளன என்று யாழ். மாவட்ட அரச அதிபரும் மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலருமான மருதலிங்கம் பிரதீபன் தெரிவித்துள்ளார்.

# நாடாளுமன்றத் தேர்தலை முன்னிட்டு நெடுந்தீவுக்கு விசேட படகு சேவைகள்



நாளை வியாழக்கிழமை நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் வாக்களிப்பதற்காக யாழ்ப்பாணம் மாவட்டத்தின் தீவுப் பகுதிகளுக்கான விசேட போக்குவரத்து ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று யாழ். மாவட்ட அரச அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தெரிவித்தார்.

நெடுந்தீவில் வாக்களிக்கவுள்ள வாக்காளர்களுக்கான படகுச் சேவைகளின் அடிப்படையில், குறிகட்டுவான் காலை 8.00 மணிக்கு வடதாரகைப் படகும், 8.15 மணிக்கு சமுத்திர தேவா படகும், 11.30 மணிக்கு குமுதினிப் படகும், பிற்பகல் 1.00 மணிக்கு கரிகணன் படகும், 2.30 மணிக்கு குமுதினிப் படகும், மாலை 4.00 மணிக்கு சமுத்திரதேவா படகும், மாலை 5.30 மணிக்கு வடதாரகை படகும் நெடுந்தீவு துறைமுகத்துக்குச் செல்லவுள்ளன.

அதேபோன்று நெடுந்தீவு துறைமுகத்தில் இருந்து காலை 6.45 மணிக்கு வடதாரகைப் படகும், 7.00 மணிக்கு சமுத்திர தேவா படகும், 10.30 மணிக்கு குமுதினிப் படகும், 11.30 மணிக்கு கரிகணன் படகும், பிற்பகல் 1.00 மணிக்கு குமுதினிப் படகும், 3.00 மணிக்கு சமுத்திரதேவா படகும், மாலை 4.30 மணிக்கு வடதாரகைப் படகும் குறிகட்டுவான் துறைமுகத்துக்குப் பயணிக்கவுள்ளன.

அத்துடன், நயினாதீவு, அனலைதீவு மற்றும் எழுவைதீவுப் பகுதிகளுக்கான விசேட கடற்போக்குவரத்து ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறு உரிய பிரதேச செயலாளர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது என்றும் யாழ். மாவட்ட அரச அதிபர் கூறினார்.

இதேவேளை, யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தில் இருந்து இலங்கை போக்குவரத்துச் சபை மற்றும் தனியார் போக்குவரத்துச் சேவை ஆகியவற்றின் போக்குவரத்து ஒழுங்குகளும் உரிய முறையில் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் யாழ். மாவட்ட அரச அதிபர் மருதலிங்கம் பிரதீபன் மேலும் குறிப்பிட்டார்.



# யாழ்.மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் கள ஆய்வு

நாடாளுமன்றத் தேர்தலுக்கான வாக்குப்பெட்டி விநியோகித்தல் மற்றும் வாக்கெண்ணும் நிலையமான யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் மேற்கொள்ளப்பட்டு வரும் பாதுகாப்பு ஒழுங்கமைப்புக்கள் தொடர்பாக யாழ்ப்பாணம் மாவட்ட அரச அதிபரும் மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலருமான மருதலிங்கம் பிரதீபனின் தலைமையில் நேற்று செவ்வாய்க்கிழமை காலை கள ஆய்வு செய்யப்பட்டது.

இந்தக் கள ஆய்வில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி உட்புற பாதுகாப்பு ஏற்பாடுகள் தொடர்பாகவும், வெளிப்புற சூழலில் வாகனப் போக்குவரத்தை மட்டுப்படுத்தல் தொடர்பாகவும், யாழ். வேம்படி உயர்தரப் பாடசாலையில் தேர்தல் பணியாளர்கள் மற்றும் முகவர்களின் வாகனப் பாதுகாப்பு தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

இந்தக் கள ஆய்வில் உதவித் தேர்தல்கள் ஆணையாளர் இ.கி.அமல்ராஜ், வடக்கு மாகாணப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஏ. ஜே. ஹாலிங்க ஜெயசிங்க, யாழ்ப்பாணம் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் லு.சூரிய பண்டார, யாழ்ப்பாணம் உதவி சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், பொலிஸ் அதிகாரிகள் மற்றும் உதவி தெரிவத்தாட்சி அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.














# வாக்களிப்பு நிலையங்களில் தயார்ப்படுத்தல் பணிகள்

நாடாளுமன்றத் தேர்தலுக்காக வாக்களிப்பு நிலையங்களை தயார்ப்படுத்தும் பணிகள் நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்தமுறை நாடாளுமன்றத் தேர்தலில் சுயேட்சை குழுக்கள் மற்றும் அரசியல் கட்சிகள் அடங்கலாக 690 குழுக்கள் போட்டியிடுகின்றன.

அத்துடன் 8,361 வேட்பாளர்கள் தேர்தலில் போட்டியிடுகின்றனர்.

225 உறுப்பினர்களைக் கொண்ட நாடாளுமன்றில் 196 உறுப்பினர்கள் வாக்கெடுப்பின் ஊடாக தெரிவு செய்யப்படுவார்கள்.

அத்துடன் 2024 வாக்காளர் பட்டியலுக்கு அமைய, சில மாவட்டங்களில் தெரிவு செய்யப்படவுள்ள வேட்பாளர்களின் எண்ணிக்கை மாறுபட்டுள்ளது.

இதற்கமைய, கம்பஹா மற்றும் களுத்துறை மாவட்டங்களில் தலா ஒரு வேட்பாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதுடன் யாழ்ப்பாணம் மற்றும் கொழும்பு ஆகிய மாவட்டங்களில் தெரிவு செய்யப்படவுள்ள வேட்பாளர்களில் ஒவ்வொரு வேட்பாளர்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளது.

இதன்படி, கொழும்பு மாவட்டத்தில் 18 உறுப்பினர்கள் நாடாளுமன்றுக்கு தெரிவு செய்யப்படவுள்ளனர்.

அத்துடன் கம்பஹா மாவட்டத்தில் 19 உறுப்பினர்கள் நாடாளுமன்றுக்கு தெரிவு செய்யப்படவுள்ளனர்.

அதேநேரம் களுத்துறை மாவட்டத்திலிருந்து நாடாளுமன்றுக்கு தெரிவு செய்யப்படவுள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கை 11ஆக அதிகரித்துள்ளது.

எனினும் யாழ்ப்பாணம் மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்படவுள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கை 6 ஆகக் குறைவடைந்துள்ளது.

# அரசாங்கம் வழங்கிய துப்பாக்கிகளை மீளக் கையளிக்குமாறு அறிவுறுத்தல்



நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், பல்வேறு அரசியல் கட்சிகள், அரசியல் அமைப்புகளின் தலைவர்கள் மற்றும் அரசாங்கத்தில் நிறைவேற்றுப் பதவிகளை வகித்த அதிகாரிகளுக்கு பல்வேறு காலகட்டங்களில் வழங்கப்பட்ட துப்பாக்கிகளை மீளக் கையளிக்குமாறு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு அமைச்சு விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி, குறித்த தரப்பினருக்குத் தற்பாதுகாப்புக்காக வழங்கப்பட்ட துப்பாக்கிகள் மற்றும் அவற்றுக்கான தோட்டாக்களை எதிர்வரும் டிசம்பர் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் ஒப்படைக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அருகிலுள்ள பொலிஸ் நிலையங்களில் துப்பாக்கிகளை ஒப்படைக்க முடியும் எனவும் பாதுகாப்பு அமைச்சின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதேநேரம், கடந்த காலங்களில் துப்பாக்கிகளைப் பெற்றுக் கொண்டவர்களின் பெயர் பட்டியல் பொலிஸாரிடம் உள்ளதாகவும், அந்த தகவல்களுக்கு அமைய மீண்டும் துப்பாக்கிகளைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பொலிஸாருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நற்பெயரை – கீர்த்தியை – அப்படியே கபளிகரம் செய்வதற்காக அதனைப் பயன்படுத்துவது வேறு.

நான் எந்த நிறுவனத்தையும் தனிப்பட்டுச் சுட்டிக்காட்ட விரும்பவில்லை. ஆனால் தார்மீக முறையற்ற – நெறியற்ற – அத்தகைய வியாதிகள் புலம்பெயர் தேசத்தில் தாராளமாக உண்டு. கேட்பதற்கு யாரும், சட்டமும் இல்லை என்பதால் இந்தச் சுத்துமாத்து.

இப்போது அரசியல் கட்சிகளின் பெயரிலும் இந்த நோய் தொற்றிக் கொண்டு விட்டது.

தாயகத்தில் செயல்படும் அரசியல் கட்சிகளைத் தாக்கவும், கொச்சைப்படுத்தவும், சிறுமைப்படுத்தவும், மதிப்பிறக்கம் செய்யவும் இத்தகைய சின்னத்தனங்கள் புலம்பெயர் தேசத்திலிருந்து முன்னெடுக்கப்படுகின்றன.

இப்போது தாயகத்தில் – இலங்கையில் – தேர்தலுக்கு முந்திய அமைதிக் காலம். கட்சிகளும், கட்சித் தலைவர்களும், பிரதிநிதிகளும், உறுப்பினர்களும் இலங்கைச் சட்டத்துக்கு அமைவாக அந்த அமைதிக் காலத்தைப் பெருமளவில் ஒழுங்காகப் பேணுகிறார்கள். உள்நாட்டு ஊடகங்களும் அப்படிப் பேணுகின்றன.

ஆனால், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பெயரை ஒத்ததான பெயரில் ஒரு கட்டமைப்பு அக்கட்சியுடன் தொடர்புபட்டு இயங்குவது போன்ற மயக்கத்தை தாயகத்தில் மக்கள் மனதில் உருவாக்கி, அதன் பெயரில் – அந்தக் கட்டமைப்பின் பெயரில் – கட்சிக்கு எதிரான அறிக்கைகள், பிரசாரங்கள், அறிவிப்புகளை – வெளிநாட்டில் இருந்தபடி இந்த அமைதி காலத்தில் முன்னெடுக்கின்றது. இதனை தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் மருத்துவர் ப.சத்தியலிங்கம் பகிரங்க அறிக்கை மூலம் நேற்று வெளிப்படுத்தி இருக்கின்றார்.

“நாடாளுமன்றத் தேர்தல் – 2024 தொடர்பாக இலங்கை தமிழரசு கட்சியின் ‘ஐ.ரி.ஏ.கே. போரம் – பிரித்தானியா’ என்ற பெயரில் சமூக ஊடகங்களில் பரப்பப்படுகின்ற விஷமத்தனமான செய்திக்கும் இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கும் எந்த விதமான தொடர்பும் இல்லை என்பதை தெரிவித்துக் கொள்வதோடு இலங்கை தமிழரசு கட்சியின் உத்தியோகபூர்வ கிளைகள் இலங்கைக்கு வெளியே இல்லை என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்” – என அவர் அறிவித்திருக்கிறார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாப்பின்படி நாட்டுக்கு வெளியில் ஒரு கிளையையோ அமைப்பையோ உத்தியோகபூர்வமாக அந்த கட்சி கொண்டிருக்க முடியாது.

தேர்தலுக்கு முந்திய அமைதிக் காலத்தில் இத்தகைய சின்னத்தனம் புரிவோரைத் தமிழ்ச் சமூகம் அடையாளம் காண வேண்டும்.

புலம்பெயர் தேசத்தில் இருப்பதால் சட்டம் பாயாது என்ற தடிப்பில் இத்தகைய கேடுகெட்ட வேலைகள் முன்னெடுக்கப்படுகின்றன. இத்தகையோரின் வழிகாட்டலில் தமிழ் மக்கள் சிக்கினால் அவர்கள் கதி என்னவாகும்...?

\+ \+ \+

தேர்தல் என்றால் நகைச்சுவை, குத்துவெட்டு எல்லாம் இருக்கின்றமை வழமையாகிவிட்டது. ஆனால், இவ்விடயத்தில் யாழ்ப்பாணத்தில் நேற்று ஒரு நகைச்சுவை இடம்பெற்றுள்ளது.

நாளை நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலுக்காக சுயேச்சைக் குழுவொன்று தாக்கல் செய்துள்ள வேட்பு மனுவில் தனக்குத் தெரியாமலேயே தன்னுடைய பெயர் வேட்பாளர் பட்டியலில் இணைக்கப்பட்டுள்ளதாகப் பெண்ணொருவர் தேர்தல் ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

யாழ்ப்பாண உதவித் தேர்தல் ஆணையாளரிடம் நேற்றைய தினம் செவ்வாய்க்கிழமை இந்த முறைப்பாட்டை அவர் செய்துள்ளார்.

“சுயேச்சைக் குழுவொன்று என்னுடைய அனுமதி இன்றி அதன் வேட்பாளர் பட்டியலில் எனது பெயரைக் குறிப்பிட்டுள்ளது. இதுவரை காலமும் எனக்கு இந்த விடயம் தெரிய வரவில்லை. நேற்றைய தினம் திங்கட்கிழமை எனது மாணவி ஒருவர் எனக்குத் தொலைபேசி அழைப்பினை எடுத்து, தேர்தலில் போட்டியிடுகிறீர்களா என வினாவிய போதே எனது பெயர் வேட்பாளர் பட்டியலில் வந்திருந்தமை எனக்குத் தெரிய வந்தது. அதனை உறுதிப்படுத்திக்கொள்ள யாழ். மாவட்டத் தேர்தல் திணைக்கள அலுவலகத்தைத் தொடர்புகொண்டேன். அது என்னுடைய பெயர் தான் என்பதனையும் எனது அனுமதியின்றி எனது பெயரை வேட்பாளர் பட்டியலில் சுயேச்சைக் குழுத் தலைவர் உள்ளடக்கியுள்ளார் என்பதனையும் உறுதிப்படுத்திக் கொண்டேன்.” – என்றார் அவர்.

அது தொடர்பில் யாழ் . மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளரிடம் எழுத்து மூலம் அவர் முறையிட்டுள்ளார்.

நல்லவேளை, தேர்தல் முடிந்த பின்னர் முறையிடாமல் விட்டமைக்கு நன்றி கூறத்தான் வேண்டும்.

---

## 70 ஆயிரம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

70 ஆயிரம் பொலிஸார் உட்பட 90 ஆயிரம் பேர் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பில் விளக்கமளிக்கும் விசேட ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று செவ்வாய்க்கிழமை அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது. இதில் கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

இங்கு மேலும் கருத்து வெளியிட்ட பொலிஸ் ஊடகப் பேச்சாளர்,

“160 நாடாளுமன்றத் தொகுதிகளுக்கு மொத்தம் 13 ஆயிரத்து 383 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன. அனைத்து வாக்களிப்பு நிலையங்களிலும் சுமார் 64 ஆயிரம் பொலிஸ் அதிகாரிகள் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

இதற்கு அப்பால் 3 ஆயிரத்து 200 பொலிஸ் விசேட அதிரடிப் படை அதிகாரிகளும் கடமையில் ஈடுபடுவர். அண்ணளவாக 70 ஆயிரம் பொலிஸார் வரை பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபடவுள்ளனர்.

இதற்கு மேலதிகமாக 12 ஆயிரத்து 227 சிவில் பாதுகாப்புப் பணியாளர்களும் நேரடியாகத் தேர்தல் கடமையில் ஈடுபடவுள்ளனர். சில முக்கிய இடங்களின் பாதுகாப்புக்காக 11 ஆயிரம் இராணுவத்தினர் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

ஏதேனும் தேவை ஏற்பட்டால் மேலும் இராணுவத்தினர் தயார் நிலையில் உள்ளனர். பொலிஸார், முப்படையினர் அடங்களாக மொத்தமாக 90 ஆயிரம் வரையான பேர் தேர்தல் பாதுகாப்புக்காக நாடு முழுவதும் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

தேர்தல் நடைபெறும் நாளிலும் அதற்குப் பின்னரும் பொலிஸ் அதிகாரிகளைப் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இம்முறை தேர்தல் பிரசாரங்கள் சுமுகமாக இடம்பெற்றுள்ளதை அவதானிக்க முடிகின்றது. பெறுபேறுகள் வெளியாகி ஒரு வார காலத்துக்குச் சட்டத்தைக் கடுமையாக அமுல்படுத்த அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.” – என்றார்.

---

## அமைதியான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் நாடாளுமன்றத் தேர்தல் குறித்து தெளிவுபடுத்தும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

“நாடாளுமன்றத் தேர்தலுக்கான சகல பணிகளும் நிறைவடைந்துள்ளன. தேர்தல் கடமைகளுக்காக நியமிக்கப்பட்டுள்ள அரச உத்தியோகத்தர்கள் மற்றும் தற்காலிக உத்தியோகத்தர்கள் தமக்குரிய கடமைகளில் ஈடுபட வேண்டும். கடமைகளில் ஈடுபடாமலிருப்பது தண்டனைக்குரிய குற்றமாகும்.

வாக்காளர் அட்டைகள் விநியோகம் நிறைவடைந்துள்ளன. இதுவரையான காலப்பகுதியில் வாக்காளர் அட்டைகள் கிடைக்கப்பெறாதவர்கள் தேர்தல்கள் ஆணைக்குழுவின் இ – சேவைக்குள் பிரவேசித்து முறையான வழிமுறைகளை பின்பற்றி தமக்கான வாக்காளர் அட்டைகளை தரவிறக்கம் செய்துகொள்ள முடியும்.

வாக்களிப்பதற்கு வாக்காளர் அட்டை இருப்பது கட்டாயமல்ல. வாக்களிப்பு மத்திய நிலையத்தில் ஏற்படும் அசௌகரியங்களைத் தடுப்பதற்காகவே வாக்காளர்அட்டைவழங்கப்படுகின்றது. இ-சேவை ஊடாக வாக்காளர் அட்டைகளைப் பெற்றுக்கொள்ளாதவர்கள் தேருநர் இடாப்பில் தாம் பதிவு செய்துள்ள முகவரியில் உள்ள வாக்களிப்பு மத்திய நிலையத்துக்குச் சென்று தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தியதன் பின்னர் வாக்களிக்க முடியும். வாக்காளர் அட்டைகள் கிடைக்கப்பெற்றுள்ளவர்கள் வாக்களிக்க செல்லும் போது வாக்காளர் அட்டையை கொண்டு செல்வது வாக்காளர்களுக்கும், வாக்களிப்பு மத்திய நிலைய உத்தியோகத்தர்களுக்கும் இலகுவானதாக இருக்கும்.

வாக்காளர்கள் சுயமாகச் சிந்தித்து வாக்களிப்பதற்காகவே தேர்தல் பிரசாரங்கள் அனைத்தும் முடிவுறுத்தப்பட்டுள்ளன. வாக்களிப்பு மத்திய நிலையத்தில் இருந்து 500 மீற்றர் தூரத்தை அண்மித்த பகுதியில் தேர்தல் பிரசாரங்களை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ முன்னெடுப்பது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. தேர்தல் தொகுதிகளில் உள்ள காரியாலயங்கள் மற்றும் அவற்றை சூழ அமைக்கப்பட்ட பதாதைகள், கட்சி கொடிகள் அனைத்தும் நீக்கப்பட வேண்டும்.

வாக்களிப்பு சிவில் பிரஜைகளின் அடிப்படை உரிமையாகும். ஆகவே, வாக்களிக்கச் செல்வதற்கு அனைவருக்கும் விடுமுறை வழங்க வேண்டும் என்பது தேர்தல் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அரச உத்தியோகத்தர்களுக்கு தாபன விதிக்கோவையின் பிரகாரம் குறைந்த பட்சம் 4 மணித்தியாலங்கள் வாக்களிக்கச் செல்வதற்கு அனுமதி வழங்க வேண்டும். அத்துடன் தூரத்தை

06

# குளவி கொட்டி குடும்பஸ்தர் பலி

## மலையகத்தில் சோகம்



புசல்லாவை, மெல்போர்ட் தோட்டத்தில் குளவிக்கொட்டுக்கு இலக்காகி தோட்டக் கங்காணி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

ஐயாவு கிருபாகரன் (வயது – 50) என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

நேற்று மதியம் 2 மணியளவிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குளவிக்கொட்டுக்கு இலக்கான மேலும் ஒருவர் கம்பளை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

சம்பவம் தொடர்பில் பொலிஸ் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

## அமைதியான...

(5ஆம் பக்கத் தொடர்ச்சி...)

அடிப்படையாகக் கொண்டு விடுமுறை வழங்க வேண்டும்.

தனியார்துறை சேவையாளர்களுக்கு விடுமுறை வழங்குவது தொழில் அல்லது சேவை வழங்குநர்களின் பொறுப்பாகும்.

தூரப் பிரதேசங்களில் வாக்களிப்பு மத்திய நிலையங்களில் வாக்களிக்கச் செல்லவுள்ள வாக்காளர்களுக்கு 3 நாட்கள் விடுமுறை வழங்க வேண்டும்.

வாக்களிக்கச் செல்லும்போது தேசிய அடையாள அட்டை (பழையது அல்லது புதியது), செல்லுபடியான வெளிநாட்டு கடவுச்சீட்டு, செல்லுபடியான சாரதி அனுமதிப் பத்திரம், அரச சேவை ஓய்வூதிய அடையாள அட்டை, சிரேஷ்ட பிரஜை அடையான அட்டை ஆகியவற்றைக் காண்பித்து தமது ஆளடையாள அட்டையை உறுதிப்படுத்த வேண்டும். அங்கீகரிக்கப்பட்ட அடையாள அட்டையைக் காண்பிக்க தவறும் பட்சத்தில் வாக்குச்சீட்டு வழங்கப்படமாட்டாது.

வாக்களிப்பு தினத்தன்று வாக்காளர்கள், வாக்களிப்பு மத்திய நிலைய பணிக்குழாம், போட்டியிடும் வேட்பாளர், வாக்களிப்பு நிலைய உத்தியோகத்தர்கள் மற்றும் கண்காணிப்பாளர்கள், வாக்களிப்பு நிலைய கடமையில் ஈடுபடும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஆகியோர் மாத்திரமே வாக்களிப்பு மத்திய நிலையத்துக்குள் பிரவேசிக்க முடியும்.

போட்டியிடும் வேட்பாளர் வாக்களிப்பு மத்திய நிலையத்துக்குள் பிரவேசிக்க முடியும். ஆனால், வாக்களிக்கும் இடத்துக்குள் பிரவேசிக்க முடியாது.

வாக்களிப்பு மத்திய நிலையத்துக்குள் தொலைபேசி கொண்டு செல்வது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. அத்துடன் வாக்களிப்பு மத்திய நிலையத்தையும், வாக்களிப்பதையும் புகைப்படமெடுப்பதையும், காணொளியாகப் பதிவிடுவதையும், தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

ஆயுதங்கள், மதுபானம் மற்றும் போதைப்பொருட்களை கைவசம் வைத்திருத்தல் தடை செய்யப்பட்டுள்ளது. மதுபானம் அருந்தி விட்டு வாக்களிப்பு மத்திய நிலையத்துக்குள் பிரவேசிப்பதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

வாக்குச்சீட்டுக்கள் இரண்டு வகையில் தயாரிக்கப்பட்டுள்ளன. மொனராகலை, பொலனறுவை, கேகாலை ஆகிய தேர்தல் மாவட்டங்களில் “ஒற்றை நிரல்“ வாக்குச்சீட்டு விநியோகிக்கப்படும். ஏனைய 19 தேர்தல் மாவட்டங்களுக்கு “இரட்டை நிரல்” வாக்குச் சீட்டு விநியோகிக்கப்படும்.

வாக்காளர் ஒருவர் தாம் விரும்பும் அரசியல் கட்சி அல்லது சுயேச்சைக் குழுவின் பெயர் மற்றும் சின்னத்தின் முன்பாகப் புள்ளடியிட்டு வாக்களிக்க முடியும். வேட்பாளர் விருப்பு வாக்கு ஒன்றை அளிக்க விரும்புவாராயின் ஒரு விருப்பு வாக்கு இலக்கத்தின் முன்பாகப் புள்ளடியிட முடியும்.

இரண்டு விருப்பு வாக்குகளை அளிக்க விரும்புவதாயின் இரண்டு விருப்பு வாக்கு இலக்கங்கள் முன்னிலையில் புள்ளடியிட முடியும். அதேபோல் 3 விருப்பு வாக்குகளை அளிக்க விரும்புவதாயின் 3 விருப்பு வாக்கு இலக்கங்கள் முன்பாகப் புள்ளடியிட முடியும்.

வாக்குச்சீட்டில் உத்தியோகபூர்வ அடையாளமிடாமல் இருத்தல், வாக்குச்சீட்டில் வாக்களிப்பு அடையாளமிடமலிருத்தல், அரசியல் கட்சி மற்றும் சுயேச்சைக் குழுவுக்கு வாக்களிக்காமல் விருப்பு வாக்கு மாத்திரம் அளித்தல், ஒன்றுக்கு மேற்பட்ட அரசியல் கட்சி மற்றும் சுயேச்சைக் குழுவுக்கு வாக்களித்தல் ஆகிய காரணிகளால் வாக்குச்சீட்டு நிராகரிக்கப்படும்.

தேர்தல் சட்டங்களைச் சிறந்த முறையில் முழுமையாக செயற்படுத்திய காரணத்தால்தான் இம்முறை தேர்தல்கள் வன்முறைகள் மிகக் குறைவாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன. பாரதூரமான சம்பவங்கள் ஏதும் பதிவாகவில்லை.

வாக்களித்ததன் பின்னர் வீடுகளுக்குச் செல்லுங்கள். உங்களின் குடும்பம் உங்களுக்கு மிகவும் முக்கியமானது. ஏதேனும் அசம்பாவிதங்கள் இடம்பெற்றால் அதன் விளைவு தாங்கள் ஆதரவளித்த வேட்பாளர்களுக்குத் தாக்கம் செலுத்தாது. ஆகவே, எந்நிலையிலும் உங்கள் குடும்பத்தைக் கருத்தில்கொண்டு செயற்படுங்கள்.

வாக்களித்ததன் பின்னர் பொது இடங்களில் ஒன்றுகூடல், ஊர்வலம் மற்றும் பேரணியாகச் செல்லல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

தேர்தல்கள் ஆணைக்குழு வெளியிடும் முடிவுகள் மீது மாத்திரம் நம்பிக்கை கொள்ளுங்கள். முடிவுகள் வெளியானவுடன் பொது இடங்களில் பட்டாசு கொளுத்துவது சட்டவிரோதமான செயற்பாடாகும். முரண்பாடுகள் தோற்றம் பெறும் வகையில் செயற்படுவதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.

அமைதியான முறையில் நாடாளுமன்றத் தேர்தலை நடத்துவதற்கு ஒட்டுமொத்த மக்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். தேர்தலைச் சிறந்த முறையில் நடத்துவதற்குச் சட்டத்தை முழுமையாக செயற்படுத்துமாறு பாதுகாப்புத் தரப்புக்குப் பணிப்புரை விடுத்துள்ளோம். சட்டவிரோதமான முறையில் செயற்படுவதைத் தவிர்த்துக்கொள்ளுங்கள்.

வாக்கு உங்களின் உரிமை மற்றும் பலம். அந்த உரிமையை நாளை வியாழக்கிழமை சிறந்த முறையில் பயன்படுத்துங்கள். அத்துடன் சட்டம் மற்றும் ஒழுங்கையும் பாதுகாக்க ஒத்துழையுங்கள்.” – என்றார்.

## ஆனையிறவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சோதனைச் சாவடி நேற்று செவ்வாய்க்கிழமை அகற்றப்பட்டது.

யாழ்ப்பாணத்துக்கான ஒரேயொரு தரைவழியான ஆனையிறவு வரலாற்றுக் காலம் தொட்டு முக்கியத்துவம் பெற்ற இடமாகும்.

இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் 1952ஆம் ஆண்டு தொடக்கம் இந்தப் பகுதியில் இராணுவ முகாம் அமைக்கப்பட்டு சோதனைச் சாவடியும் இயங்கி வந்தது.

வரலாற்றுக் காலம் தொட்டு போர் மற்றும் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த ஆனையிறவை 2000ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு கைப்பற்றியது. இதைத் தொடர்ந்து அங்கிருந்த இராணுவ முகாமும் சோதனைச் சாவடியும் அகற்றப்பட்டன.

இறுதிப் போர் நடவடிக்கையின்போது ஆனையிறவை 2008ஆம் ஆண்டு இராணுவம் மீளக் கைப்பற்றியது. இதன் பின்னர் கடந்த 17 வருடங்களாக இயங்கி வந்த சோதனைச் சாவடியே தற்போது அகற்றப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.



# தேசபந்து தென்னகோனின் நியமனம் தொடர்பில் ஜனாதிபதியின் நிலைப்பாட்டை தெரிவிக்க அனுமதி

பொலிஸ் மாஅதிபராக தேசபந்து தென்னகோன் நியமிக்கப்பட்டமை தொடர்பில் தற்போதைய ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவின் நிலைப்பாட்டை தெரிவிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்குமாறு மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் நெரின்புள்ளே முன்வைத்த கோரிக்கைக்கு உயர் நீதிமன்றம் நேற்று அனுமதி வழங்கியுள்ளது.

தேசபந்து தென்னகோன் பொலிஸ் மாஅதிபராக நியமிக்கப்பட்டமைக்கு எதிராக கொழும்பு பேராயர் மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை உள்ளிட்ட 08 தரப்பினர் தாக்கல் செய்த மனு நேற்று பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட சந்தர்ப்பத்தில் இவ்வாறு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

யசந்த கோதாகொட, அச்சல வெங்கப்புலி மற்றும் மஹிந்த சமயவர்தன ஆகிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் இந்த மனு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இந்த மனு 2025 பெப்ரவரி 24 மற்றும் 25ஆம் திகதிகளில் மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

# மெண்டிஸ் நிறுவன பணிப்பாளரின் பிணை கோரிக்கை நிராகரிப்பு

சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ள டபிள்யூ.எம்..மெண்டிஸ் நிறுவனத்தின் பணிப்பாளரான ரன்தேவ் தினேந்திர ஜோன் முன்வைத்த பிணைக் கோரிக்கை மேன்முறையீட்டு நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டுள்ளது.

இந்த பிணை கோரிக்கையானது சோபித ராஜகருணா மற்றும் மஹேன் கொபல்லாவ ஆகிய மேன்முறையீட்டு நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

3.5 பில்லியன் ரூபா பெறுமதி சேர் வரியை செலுத்தத் தவறியமை தொடர்பில் கொழும்பு நீதவான் நீதிமன்றத்தால் ரன்தேவ் தினேந்திர ஜோனுக்கு 6 மாத சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

பிரதிவாதியின் பிணைக் கோரிக்கையை நிராகரித்த நீதியரசர்கள் குழாம், விடயங்களை உறுதிப்படுத்துவதற்காக மனுவை எதிர்வரும் 29 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ள திகதியிட்டது.

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை – 2023

“மரங்களின் பிரதான தொழிற்பாடுகள் புரிந்துகொள்ளப்பட்டு அவை உயிர்வாழ் அங்கிகளாக எம்மால் உணரப்பட்டால், அவை எமக்கு ஆதாயமும் அகமகிழ்வும் தரக் கூடிய என்றும் முடிவில்லாத வளமாக விளங்கும்.”

- நி.தி.மிரோவ் (அமெரிக்க எழுத்தாளர்)



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## அடுத்த திருவிழா

நாளை பொதுத் தேர்தல் திருவிழா. வாக்களிப்பும், அதைத் தொடர்ந்து வாக்கு எண்ணிக்கையும் என்று அடுத்த இரண்டு, மூன்று நாள்கள் பெரும் களேபரமாக இருக்கும்.

அதற்குப் பின்னர் விவகாரம் நாடாளுமன்றக்களத்தில். புதிய அரசு அமைத்தல், சபாநாயகர் தெரிவு, அமைச்சரவை பதவியேற்பு என்று விவகாரம் சூடு பிடிக்கும். 21ஆம் திகதி புதிய நாடாளுமன்றம் கூடுவதோடு நாடாளுமன்ற விவகாரங்கள் பெரும் கவனத்தைப் பெறும்.

அதே சமயம், அதே தினத்தில் தமிழர் தாயகத்தில் - வடக்கு, கிழக்கில் - மாவீரர் தினத் திருவிழா ஆரம்பமாகும். தமிழ் மக்கள் வழமை போல அதனை உணர்வெழுச்சியுடன் அனுஷ்டிக்கத் தயாராவார்.

அதே வேளையில், வழமை போலவே பௌத்த - சிங்களப் பெரும் தேசியவாதம் தமிழர்களின் நினைவேந்தும் உரிமையைத் தன்னுடைய மேலாதிக்கத்தின் மூலம் அடக்கி, சிறுமைத்தனம் பண்ணும். தனது கெடுபிடித்தனத்தை அவிழ்த்து விடும்.

இப்போது புதிய ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவுக்கு பின்னால் துதி பாடிச் செல்லும் தமிழர் தரப்புக்கள் அப்போது என்ன செய்யப் போகின்றன என்ற ஒரு கேள்வி உள்ளது.

தமிழர் தேசத்தின் மீது பெரும் கொடூர யுத்தத்தை ஏவி விட்டு, தமிழர் தாயகத்தை வரலாற்றுப் பேரழிவுக்குள்ளும் போரழிவுக்குள்ளும் தள்ளிய ராஜபக்ஷக்கள் தமிழர்களுடைய நினைவேந்தும் உரிமையைப் பறித்து, அதைக் கூடத் தமிழர்களுக்கு விட்டு வைக்காமல் அவர்களை அடக்கி அடிமைகளாக் குவதிலேயே கண்ணாக இருந்தனர்.

அந்தச் சமயங்களில், தமிழ் மக்களுக்கு மரணமடைந்த தங்களுடைய உறவுகளுக்கு விளக்கேற்றி அஞ்சலி செலுத்தி நினைவேந்தும் உரிமை உண்டு என்று எதிரணியில் இருந்த தென்னிலங்கை சிங்களப் பிரமுகர்கள் பலர் நியாயம் உரைக்கத் தவறவில்லை.

அப்போது, ரணில் விக்கிரமசிங்க, அநுர குமார திஸநாயக்க போன்றவர்கள் இந்த எதிரணிப் பிரமுகர்களின் அடக்கம்.

ஆனால் கோட்டாபய ராஜபக்ஷவின் இடத்திற்கு ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக வந்த பின்னரும் கூட தமிழர்களின் நினைவேந்தும் உரிமைக்குக் கெடுபிடி விதிக்கும் நடவடிக்கைகள் தொடரவே செய்தன. தமிழர் தேசத்தில் நிலை கொண்டிருக்கின்ற சிங்களப் பொலிஸார் தமிழர்கள் தங்களுடைய மறைந்த உறவுகளுக்காக விளக்கேற்றுவது பெரும் கிரிமினல் குற்றம் என்பது போல, யுத்தம் முடிந்த பின்னர் கடந்த 15 வருடங்களாகக் கெடுபிடி பண்ணி வருகிறார்கள். இது சட்டத்தின்பாற்பட்டதல்ல, பேரினவாத மேலாதிக்கத் திமிரின்பாற்பட்டது.

அந்தக் கொடூரம், முன்னர் எதிரணியில் இருக்கும் போது தமிழர்களின் நினைவேந்தும் உரிமையை அங்கீகரித்த ரணில் விக்கிரமசிங்க, அதன் பின்னர் ஜனாதிபதியாகி அதிகாரத்துக்கு வந்த போது, அவரது ஆட்சியின் கீழும் தொடர்ந்தது.

ரணில் விக்கிரமசிங்க போல இப்போதைய ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க முன்னர் எதிரணியின் இருந்த சமயத்தில் - தமிழர் தரப்போடு நாடாளுமன்றிலும் வெளியிலும் சேர்ந்து செயல்பட்ட வேளையில் - தமிழர்களின் நினைவேந்தும் உரிமையை அங்கீகரிக்கத் தவறவில்லை.

இப்போது அதிகாரம் அவருடைய கையில். ஆனால் அவருடைய பேச்சுகளும் செயல்களும், முன்னைய ஆட்சியாளர்களின் - அதிகாரத்தில் இருக்கும் தரப்புக்களின் - பௌத்த, சிங்களப் பெரும் தேசிய வாதப் போக்குகளைப் பிரதிபலிக்கும் வழமையான செல்நெறியிலேயே இருப்பதை நாம் காண்கிறோம்.

ரணில்விக்கிரமசிங்கபோல-எதிர்அணியில் இருந்த சமயம் தமிழர்களின் நினைவேந்தல் உரிமையை அங்கீகரித்து விட்டு, ஆட்சி அதிகாரத்துக்கு வந்ததும் அதை கவனிக்காமல் விட்டமை போல - இப்போது அநுரகுமாரதிஸநாயக்கவும்அதே வேலையைத்தான் செய்யப் போகின்றார் என்பதை ஊகிக்க முடிகிறது.

இது தேர்தல் சமயம். அதனால் அடக்கி வாசிக்கிறார்கள். வாக்களிப்பு முடிந்ததும், பௌத்த - சிங்களப் பெரும் தேசிய வாதத்தின் உண்மையான குரூர முகம் வெளிப்படும் - யார் அதிகாரத்தில் இருந்தாலும்.

ஆக, தேர்தல் திருவிழா முடிந்ததும் தமிழர்களின் நினைவேந்தும் உரிமையைச் சூறையாடும் பேரினவாத திருவிழா வழமை போல ஆரம்பமாகும்.

தமிழர் தரப்பின் சிரேஷ்ட சட்டத்தரணிகள் நினைவேந்தும் உரிமையை நிலைநிறுத்துவதற்காக ஒவ்வொரு நீதிவான் நீதிமன்றம் தோறும் வழமை போல மீண்டும் அலைய வேண்டியிருக்கும்.




# இலங்கை தொடர்பான பாதுகாப்பு எச்சரிக்கையை மீளப்பெறுமாறு வெளிவிவகார அமைச்சு கோரிக்கை

இலங்கை தொடர்பில் விடுக்கப்பட்டுள்ள பாதுகாப்பு எச்சரிக்கையை மீளப்பெறுமாறு இலங்கைக்கான அமெரிக்க தூதரகத்திடம் வெளிவிவகார அமைச்சு கோரிக்கை விடுத்துள்ளது.

கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகம் கடந்த 23ஆம் திகதி பாதுகாப்பு ஆலோசனையை வழங்கியதுடன், மறு அறிவித்தல் வரை அறுகம்பை பகுதிக்கு சுற்றுலா மேற்கொள்வதைத் தவிர்க்குமாறு அமெரிக்க பிரஜைகளுக்கு அறிவுறுத்தல் வழங்கியிருந்தது.


இதேவேளை, இந்த சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் 06 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டதாக பாதுகாப்பு தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

அறுகம்பை பிரதேசத்தின் பாதுகாப்பு தொடர்பில் ஆராய்வதற்காக பாதுகாப்புச் செயலாளர் சம்பத் துய்யகொந்தா கிழக்கு மாகாணத்திற்கு கடந்த ஞாயிற்றுக்கிழமை விஜயம் செய்திருந்தார்.

இதன்போது தற்போதுள்ள பாதுகாப்பு நடவடிக்கை தொடர்பில் இராணுவம் மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் விளக்கமளித்ததாக பாதுகாப்பு அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

பெறப்பட்ட முடிவுகளுக்கு அமைய அறுகம்பை உள்ளிட்ட சுற்றுலாத் தலங்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து பாதுகாப்பு செயலாளர் அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

சுற்றுலாப் பயணிகளின் சுதந்திரத்தில் தலையிடாத வகையில் அவர்களின் பாதுகாப்பு தொடர்பான நம்பிக்கையை ஏற்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென பாதுகாப்பு செயலாளர் இதன்போது வலியுறுத்தியுள்ளார்.






# புதிய நாடாளுமன்றக் கூட்டத்தொடர் தொடர்பில் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியீடு

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க புதிய நாடாளுமன்றக் கூட்டத்தொடர் தொடர்பான அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டுள்ளார்.

அரசியலமைப்பின் 70 ஆவது சரத்தின் பிரகாரம் இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி, புதிதாக தெரிவு செய்யப்படும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்துகொள்ளும் முதலாவது அமர்வு எதிர்வரும் நவம்பர் மாதம் 21ஆம் திகதி காலை 10 மணிக்கு இடம்பெறும் என அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.




# மதுபானசாலைகள் இரு நாள்கள் பூட்டு!


நாளை வியாழக்கிழமை நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறவுள்ளதால் நாடளாவிய ரீதியிலுள்ள அனைத்து மதுபான சாலைகளையும் இரண்டு நாட்களுக்கு மூடுவதற்கு மதுவரித் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

அதற்கமைய நாளையும், நாளைமறுதினமும் மதுபானசாலைகளை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும், இது தொடர்பாக அனைத்து மதுபானசாலை உரிமையாளர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது எனவும் மதுவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நாளை நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறவுள்ளதாலும், நாளைமறுதினம் போயா தினமாக இருப்பதாலும் இந்த இரண்டு தினங்களிலும் மதுபானசாலைகளை மூடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத் தேர்தலை முன்னிட்டு மதுபானசாலைகளை மூடுவதற்கு அறிவிக்கப்பட்டுள்ள இந்தத் தினங்களில் இந்த விதிமுறைகளை மீறி சட்டவிரோதமாகச் செயற்படும் மதுபானசாலைகளுக்கு எதிராக சட்டத்தை கடுமையாக நடைமுறைப்படுத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது எனவும் மதுவரித் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

# பரீட்சைகள் திணைக்களத்தின் நிகழ்நிலை சேவை இடம்பெறாது




எதிர்வரும் 14 ஆம் திகதியன்று, சான்றிதழ் விநியோகிக்கும் ஒருநாள் சேவை மற்றும் நிகழ்நிலை சேவை என்பன இடம்பெறமாட்டாது என பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

விசேட அறிக்கையொன்றை வெளியிட்டு பரீட்சைகள் திணைக்களம் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளது.

பொதுத் தேர்தலுடன் தொடர்புடைய கடமைகளுக்காகத் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளமையினால் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, தேர்தல் நடவடிக்கைகள் காரணமாக இன்றும், நாளையும் நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து பாடசாலைகளையும் மூடுவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

எதிர்வரும் திங்கள் கிழமை 18ஆம் திகதி மீண்டும் பாடசாலை ஆரம்பிக்கப்படவுள்ளது.

அதேநேரம், நாடாளுமன்றத் தேர்தல் நடவடிக்கைகள் காரணமாக நாரஹேன்பிட்டியவில் உள்ள மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களமும் இன்றும், நாளையும் மூடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.



# ரணில், தினேஷ் உட்பட முன்னாள் அமைச்சர்கள் 18 பேரிடம் வாக்குமூலம் பதிய நீதிமன்று பணிப்பு

## தரமற்ற மருந்துப் பொருள் கொள்வனவு வழக்கு தொடர்பில்

தரமற்ற மருந்துப் பொருள் கொள்வனவு வழக்கு தொடர்பில், அப்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அப்போதைய பிரதமர் தினேஷ் குணவர்தன உட்பட கடந்த அரசாங்கத்தின் 18 அமைச்சர்களிடம் வாக்குமூலம் பதிவு செய்யுமாறு மாளிகாகந்த நீதிவான் லோச்னி அபேவிக்ரம நேற்று முன்தினம் உத்தரவிட்டுள்ளார்.

2022ஆம் ஆண்டு அமைச்சரவையினால் அவசரகால கொள்வனவுகளின் கீழ் சந்தேகத்திற்குரிய 200 மருந்துகளைக் கொள்வனவு செய்வதற்கான அனுமதி தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அமைச்சரவை அமைச்சர்களிடம் வாக்குமூலம் பதிவு செய்ய பிரதி சொலிசிட்டர் ஜெனரல் லக்மினி கிரிஹாகம நீதிமன்றில் அனுமதி கோரிய போதே நீதிவான் இந்த உத்தரவை வழங்கினார்.

இதன்படி, முன்னாள் ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கு மேலதிகமாக, முன்னாள் அமைச்சரவை அமைச்சர்களான நிமல் சிறிபால டி சில்வா, டக்ளஸ் தேவானந்தா, சுசில் பிரேமஜயந்த, பந்துல குணவர்தன, மஹிந்த அமரவீர, விஜயதாஸ ராஜபக்ஷ, ஹரின் பெர்னாண்டோ, ரமேஷ் பத்திரன, பிரசன்ன ரணதுங்க, விதுர விக்கிரமநாயக்க, காஞ்சன விஜேசேகர, நஸீர் அஹமட், ரொஷான் ரணசிங்க, டிரான் அலஸ், நளின் பெர்னாடோ மற்றும் ஜகத் புஷ்ப குமார ஆகியோரிடம் வாக்குமூலம் பதிவு செய்யுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.,

தரமற்ற போதைப்பொருள் விநியோகம் தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேக நபரான சுதத் ஜானக்கவை எதிர்வரும் 25ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

# மின் கட்டண திருத்த பிரேரணை அடுத்த வாரம் ஆணைக்குழுவுக்கு




மின்சாரக் கட்டணக் குறைப்பு தொடர்பான புதிய பிரேரணையை எதிர்வரும் வாரத்தில் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் வழங்க முடியும் என இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

மின்சாரக் கட்டணத்தைக் குறைப்பது தொடர்பான முன்மொழிவுகள் இதற்கு முன்னரும் பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபையின் ஊடகப் பேச்சாளர் தனுஷ்க பராக்கிரம சிங்க தெரிவித்துள்ளார்.

ஆனால் இந்த பிரேரணையை மீளாய்வு செய்து கடந்த 8ஆம் திகதி சமர்ப்பிக்க வேண்டும் என பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்திருந்தது.

இதற்கு இரண்டு வார கால அவகாசம் அளிக்குமாறு இலங்கை மின்சார சபை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் தெரிவித்திருந்தது.

இதன்படி, புதிய மின் கட்டண முன்மொழிவு அடுத்த வாரம் பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவில் சமர்ப்பிக்கப்பட உள்ளது.

# நேரடி, மறைமுகத் தேர்தல் பிரசாரம் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது

## தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் தெரிவிப்பு




"வாக்காளர்கள் நாளை சுயமாகச் சிந்தித்து வாக்களிப்பதற்காகவே தேர்தல் பிரசாரங்கள் அனைத்தும் நேற்று முன்தினம் நள்ளிரவுடன் முடிவுறுத்தப்பட்டுள்ளன. வேட்பாளர்கள் மற்றும் அவர்களின் ஆதரவாளர்கள் நேற்றும், இன்றும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தேர்தல் பிரசாரங்களில் ஈடுபடுவதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும். தேர்தல் சட்டத்துக்கு முரணாகச் செயற்படுபவர்களுக்கு எதிராக உரிய சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும்."

– இவ்வாறு தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீரத்நாயக்க தெரிவித்தார்.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் காரியாலயத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

"நாடாளுமன்றத் தேர்தலுக்கான சகல பணிகளும் நிறைவடைந்துள்ளன. சகல வாக்களிப்பு மத்திய நிலையங்கள் மற்றும் வாக்கெண்ணும் நிலையங்களின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

அமைதியானதும், சுதந்திரமானதுமான வகையில் தேர்தலை நடத்துவதற்கு ஒட்டுமொத்த மக்களினதும் ஒத்துழைப்பை எதிர்பார்த்துள்ளோம்.

தேர்தல் பிரசாரங்கள் அனைத்தும் திங்கட்கிழமை (நேற்று முன்தினம்) நள்ளிரவுடன் நிறைவடைந்தன. வேட்பாளர்கள் தேர்தல் பிரசாரங்களில் ஈடுபடுவதற்குப் போதுமான கால அவகாசம் வழங்கப்பட்டது.

வாக்காளர்கள் சுயமாகச் சிந்தித்து வாக்களிக்க வேண்டும் என்பதற்காகவே தேர்தல் பிரசாரங்கள் அனைத்தும் முடிவுறுத்தப்படுகின்றன

வேட்பாளர்கள் மற்றும் அவர்களின் ஆதரவாளர்கள் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தேர்தல் பிரசாரங்களில் ஈடுபடுவது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

தேர்தல் சட்டத்துக்கு முரணாகச் செயற்படுபவர்களுக்கு எதிராக உரிய சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

நாடாளுமன்றத் தேர்தலின்போது வாக்காளரின் இடது கை ஆட்காட்டி விரல் மீது உரிய அடையாளம் இடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிப்பின்போது வாக்காளரின் இடது கை சுண்டு விரலில் உரிய அடையாளம் இடப்பட்டது.

அத்துடன் 2024.10.26 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெற்ற காலி மாவட்டம், எல்பிட்டிய பிரதேச சபைத் தேர்தலில் வாக்காளரின் இடது கை பெருவிரலில் உரிய அடையாளம் இடப்பட்டது.

இவ்வாறானபின்னணியில்1981ஆம் ஆண்டின் முதலாம் இலக்க நாடாளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 38(3(ஆ) ஆம் பிரிவின் பிரகாரம், வாக்களிப்பின்போது வாக்காளிப்பதை அடையாளப்படுத்துவதை அடையாளம் இடுவதில் எழும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வகையில், நாடாளுமன்றத் தேர்தலின்போது வாக்காளரின் இடது கை ஆள்காட்டி விரல் மீது உரிய அடையாளம் இடப்படும். வாக்காளருக்கு இடது கை ஆள்காட்டி விரல் இல்லாதிருப்பின் அவரது வலது கையில் உள்ள வேறேதேனுமொரு விரலில் உரிய அடையாளம் இடப்படும்." – என்றார்.

# பிள்ளையான் தரப்பு ஏற்பாடு செய்த ஊடகவியலாளர் சந்திப்புக்குத் தடை






நாடாளுமன்ற தேர்தல் பிரசாரங்கள் அனைத்தும் திங்கட்கிழமை நள்ளிரவுடன் நிறைவடைந்த நிலையில் நேற்று செவ்வாய்க்கிழமை தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியினால் ஊடகவியலாளர் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்ட நிலையில் தேர்தல்கள் திணைக்கள அதிகாரிகளினால் அது தடுக்கப்பட்டுள்ளது.

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவரும் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற தேர்தல் வேட்பாளருமான சிவநேசதுரை சந்திரகாந்தனினால் இந்த ஊடகவியலாளர் சந்திப்பு அவரது அலுவலகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததாகக் கூறப்படுகின்றது.

தேசிய ரீதியில் தேர்தல் கண்காணிப்பில் ஈடுபட்டு வரும் ட்ரான்ஸ்பேரன்சி இன்டர்நஷனல் சிறிலங்கா அமைப்பு மாவட்ட உதவி தேர்தல்கள் தெரிவத்தாட்சி அலுவலர் மற்றும் தேர்தல் பிணக்குகள் தீர்க்கும் பிரிவுக்கு செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் தேர்தல்கள் திணைக்கள அதிகாரிகளினால் ஊடகவியலாளர் சந்திப்பு தடுக்கப்பட்டுள்ளது.

தேர்தல்கள் சட்டங்களுக்கு முரணான வகையில் இந்த ஊடகவியலாளர் சந்திப்பு தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததாகத் தெரிவித்தே இந்த ஊடகவியலாளர் சந்திப்பு தடுத்து நிறுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.




# நாளை தேர்தலின் போது வாக்களிப்பு நிலையங்களில் விசேட தேவையுடையவர்களுக்குச் சிறப்பு ஏற்பாடுகள்

நாளை நடைபெறும் பொதுத் தேர்தலில் விசேட தேவையுடைய வாக்காளர்களுக்கு வழங்கப்படும் வசதிகள் தொடர்பில் தேர்தல் ஆணைக்குழு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:-

"வாக்கெடுப்பு நிலையத்தினுள் தங்களது வாக்குச் சீட்டில் அடையாளமிடுவதற்கு உதவியாளர் ஒருவரை அழைத்துச் செல்ல சட்டரீதியாக ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

வாக்கெடுப்பு நிலையத்திற்குச் சென்று வரத் தேவையான போக்குவரத்து வசதிகளை தங்களது தேர்தல் மாவட்டத்தின் தெரிவத்தாட்சி அலுவலர் ஊடாகப் பெற்றுக் கொள்ள முடியும்.

வாக்கெடுப்பு நடைபெறுகின்ற கட்டடத்தின் தூரம் 100 மீற்றருக்கும் அதிகமாக இருப்பின் வாக்கெடுப்பு நிலையத்திற்கு முச்சக்கரவண்டியில் செல்ல முடியும்.

▶ வாக்கை அடையாளமிட முடியாதவர்களுக்கு வாக்குச் சீட்டிற்கு வழிகாட்டும் தொடுகை சட்டகம் ஒன்றைப் பயன்படுத்துவதற்கு வசதிகளை ஏற்பாடு செய்யப்படும்.

▶ தமது அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்குச் செல்லுபடியான அடையாள அட்டையைச் சமர்ப்பிக்க முடியும்.

▶ வாக்கெடுப்பு நிலையத்தின் வளாகத்தில் காட்சிப்படுத்தப்படுகின்ற அறிவித்தல்களைச் சைகை மொழி மூலமான உருவப் படங்களுடன் காட்சிப்படுத்தல்.

▶ தேர்தல் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ தேர்தல் பெறுபேறுகளை வெளியிடும் போது சைகை மொழி பெயர்ப்புடன் வெளியிடல்.

- போன்ற விடயங்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளன."

## யாழ் விபத்தில் ஒருவர் மரணம்

யாழ்ப்பாணம், மானிப்பாய் - கைதடி பிரதான வீதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். இந்த விபத்துச் சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

இதன்போது, அரசடி வீதி, வட்டு. தெற்கு, வட்டுக்கோட்டைப் பகுதியைச் சேர்ந்த 53 வயதுடையவரே உயிரிழந்துள்ளார்.

இந்நபர் மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்தபோது வீதியில் மற்றுமொரு மோட்டார் சைக்கிளில் சென்ற நபரை முந்திச் செல்வதற்கு முயற்சித்துள்ளார். அப்போதே அந்த மோட்டார் சைக்கிளுடனும் மோதி சம்பவ இடத்திலேயே இவர் உயிரிழந்துள்ளார்.

விபத்தில் உயிரிழந்தவரின் சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைகளின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

## அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையமும் தேர்தல் பணிக்கு ஒத்துழைக்கத் தயார் நிலை

தேர்தல் காலத்தில் ஏற்படக்கூடிய அவசரநிலைகளை நிவர்த்தி செய்வதற்கு விசேட வேலைத்திட்டம் ஒன்று நடைமுறைபடுத்தப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

வளிமண்டலவியல் திணைக்களம், நீர்ப்பாசனத் திணைக்களம், தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம், முப்படைகள் மற்றும் இலங்கைப் பொலிஸ் ஆகிய தரப்பினர் இதற்காக இணைந்து செயற்படவுள்ளனர் என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் பணிப்பாளர் பிரதீப் கொடிப்பிலி தெரிவித்துள்ளார்.

மேலும், எந்த ஒரு பேரிடர் சூழ்நிலையையும் கையாள்வதற்கான சிறப்பு மையம் நேற்று முதல் செயல்படுகிறது என்றும் அவர் கூறியுள்ளார்.

இந்த சிறப்பு மையம், நேற்று முதல் 16ஆம் திகதி வரை 5 நாள்களுக்குச் செயல்படும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை நாளை நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலுக்கான அனைத்து நடவடிக்கைகளும் தற்போது தயார் செய்யப்பட்டுள்ளன எனத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இம்முறை தேர்தல்களை கண்காணிப்பதற்காக சுமார் 6,000 பிரதிநிதிகள் கொண்ட குழுவொன்றை ஈடுபடுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் றோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

# தபால் வாக்குகள் எண்ணும் பணி நாளை மாலை 4.15 க்கு ஆரம்பம்




நாளை பொதுத் தேர்தல் வாக்களிப்பு மாலை 4 மணிக்கு முடிந்த பின்னர் வாக்கு எண்ணும் பணிகள் நாளை மாலை 4.15 மணிக்கு ஆரம்பிக்கப்படும் என தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற பொதுத் தேர்தல் தொடர்பான விசேட செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அங்கு மேலும் கருத்து தெரிவித்த அவர், தபால்மூல வாக்கெண்ணும் பணிகள் எதிர்வரும் 14ஆம் திகதி மாலை 4.15 ஆரம்பமாகும். - என்றார்.

மாலை 7.15 மணிக்கு அந்தந்த வாக்குச் சாவடிகளில் இருந்து வாக்குப் பெட்டிகள் பெறப்பட்டு வாக்கெண்ணும் பணிகளை துவங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அதன்பிறகு, முடிவுகளை ஊடகங்களுக்கு வெளியிடுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அதுவரை அதிகாரப்பூர்வமற்ற முடிவுகளை வெளியிடுவதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

இதேவேளை, வாக்கு எண்ணும் பணிகள் 3 கட்டங்களாக நடைபெறவுள்ளன. முதலில், ஒவ்வொரு பெட்டியிலும் உள்ள வாக்குகள் எண்ணப்படும்.

இரண்டாவதாக, ஒவ்வொரு அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி மற்றும் சுயேச்சைக் குழுவுக்கு கிடைத்த வாக்குகள் எண்ணப்படும்.

இறுதியாக, வாக்குகள் எண்ணிக்கைக்கு ஏற்ப, ஒவ்வொரு அங்கீகரிக்கப்பட்ட கட்சி மற்றும் சுயேச்சைக் குழுவும் தகுதியான எம்.பி.க்களின் எண்ணிக்கை கணக்கிடப்பட்டு, அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களில் வேட்பாளர்கள் பெற்ற வாக்குகளின் எண்ணிக்கை கணக்கிடப்படும்.” எனத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அங்கீகரிக்கப்பட்ட ஒவ்வொரு அரசியல் கட்சி மற்றும் சுயேச்சைக் குழுக்களின் வேட்பாளர்கள் விருப்பு வாக்குகளின் அடிப்படையில் நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்குத் தெரிவு செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.




# வளிமண்டலவியல் திணைக்களத்தின் இணையத்தளம் மீது சைபர் தாக்குதல்

வளிமண்டலவியல் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளம் மீது சைபர் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

கடந்த முதலாம் திகதி மேற்படி சைபர் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கணினி அவசரப்பிரிவு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் வளிமண்டலவியல் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டமைக்கு அமைய, சைபர் பாதுகாப்பு தொடர்பான மதிப்பீட்டு அறிக்கை கோரப்பட்டுள்ளதாக கணினி அவசரப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

மேற்படி அறிக்கை கிடைத்ததன் பின்னர் உத்தியோகபூர்வ இணையத்தளத்தை வழமைக்குக் கொண்டுவர நடவடிக்கை எடுக்கவுள்ளதாக கணினி அவசரப்பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.

# அரசியல் கட்சியுடன் தொடர்புடைய வினாக்கள் விசாரணை நடத்த கல்வி அமைச்சு பணிப்புரை

பாடசாலை தவணைப் பரீட்சை வினாத்தாளில் அரசியல் கட்சியொன்றுடன் தொடர்புடைய 05 வினாக்கள் உள்ளடக்கப்பட்டமை தொடர்பில் விரைவில் விசாரணை நடத்துமாறு கல்வி அமைச்சின் செயலாளர் துறைசார் அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

களுத்துறை மாவட்டத்திலுள்ள பாடசாலையொன்றில் இரண்டாம் தவணைப் பரீட்சையின் போது உயர்தர மாணவர்களுக்கு வழங்கப்பட்ட பொது அறிவு வினாத்தாளில் அரசியல் கட்சியொன்றுடன் தொடர்புடைய 05 வினாக்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

குறித்த வினாத்தாள் அதே பாடசாலையில் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சு கூறியுள்ளது.

# இலங்கையில் கைதுசெய்யப்பட்ட மீனவர்களை விடுவிக்கக் கோரி பாம்பன் பாலத்தில் மறியல்







இலங்கை சிறையில் அடைக்கப்பட்டுள்ள மீனவர்களை விடுதலை செய்ய வலியுறுத்தி விசைப்படகு மற்றும் நாட்டுப்படகு மீனவர்கள் ஒருங்கிணைந்து நேற்று பாம்பன் பாலத்தில் சாலை மறியல் போராட்டம் நடத்தினர்.

கடந்த ஜனவரி மாதத்திலிருந்து தற்போது வரை 66 படகுகளுடன் 497 தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்படும் மீனவர்கள், அந்நாட்டின் வெளிநாட்டு மீன்பிடி தடை சட்டத்தின் கீழ் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டு நீதிமன்றங்களில் வழக்கு பதிவு செய்யப்படுகிறது. இதில் 90 மீனவர்கள் ஆறு மாதம் முதல் இரண்டு ஆண்டு காலம் வரையிலும் தண்டனை மற்றும் அபராதம் விதிக்கப்பட்டு இலங்கை சிறைகளில் தண்டனை கைதிகளாக உள்ளனர் என தமிழக மீனவர்கள் செய்தி வெளியிட்டுள்ளனர்.

இந்நிலையில் கடந்த ஞாயிற்றுக் கிழமை 16 இராமேஸ்வரம் விசைப்படகு மீனவர்கள் சிறைப்பிடிக்கப்பட்டதும், இராமேசுவரத்தில் நடைபெற்ற விசைப்படகு மீனவப் பிரதிநிதிகள் ஆலோசனை கூட்டத்தில், மீனவர்களையும், படகுகளையும் விடுவிக்க வலியுறுத்தி நவம்பர் 12 ஆம் திகதி பாம்பன் பாலத்தில் சாலை மறியல் போராட்டம் நடத்தப்படும் என அறிவித்தனர்.

இந்த போராட்ட அறிவிப்புக்கு நாட்டுப் படகு மீனவ அமைப்புகளும் ஆதரவு அளித்தன. முன்னதாக திங்கள் கிழமை இராமேஸ்வரம் வட்டாச்சியர் அலுவலகத்தில் சாலை மறியல் போராட்டத்தை திரும்பப் பெற வலியுறுத்தி மீனவப் பிரதிநிதிகளுடன் அரசு அதிகாரிகள் நடத்திய அமைதிக்குழு கூட்டத்தில் உடன்பாடு ஏற்படவில்லை.

இதனால், மீனவர்கள் அறிவித்தபடியே நேற்று காலை 9.30 மணியளவில் பாம்பன் சாலைப் பாலம் துவங்கும் இடத்தில் மறியல் போராட்டம் ஆரம்பமானது. இந்த சாலை மறியல் போராட்டத்தினால் இராமேஸ்வரம் – மதுரை தேசிய நெடுஞ்சாலையில் இரண்டு மணி நேரத்திற்கும் மேலாக போக்குவரத்து பாதிப்புக்குள்ளானது. போராட்டம் துவங்கிய போது மீனவர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையே முறுகல்நிலை ஏற்பட்டது.

சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்ட மீனவர்களிடம், மாவட்ட பொலிஸ் கண்காணிப்பாளர் சந்தீஷ் தலைமையிலான பொலிஸ் அதிகாரிகள் பேச்சுவார்த்தை நடத்தியதை தொடர்ந்து மீனவர்கள் கலைந்து சென்றனர். பாம்பனில் நடைபெற்ற ஆர்ப்பாட்டம் மற்றும் சாலை மறியல் போராட்டத்தில் சுமார் 500 மீனவர்களும், பெண்களும் கொண்டனர்.

# ஷாருக்கானுக்கு கொலை மிரட்டல்: சத்தீஸ்கரில் சந்தேக நபர் கைது

நடிகர் ஷாருக்கானுக்கு கொலை மிரட்டல் விடுத்தார் என சந்தேகிக்கப்படும் பைசல் கான் என்பவரை சத்தீஸ்கரின் ராய்பூரில் மும்பை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மும்பையின் பந்த்ரா பொலிஸ் நிலையத்துக்கு கடந்த 7 ஆம் திகதி தொலைபேசியில் பேசிய மர்ம நபர் ஒருவர், மும்பையில் ஷாருக்கானின் இல்லத்துக்கு வெளியே தான் இருப்பதாகவும், தனக்கு 50 லட்சம் ரூபா தராவிட்டால் அவரை கொலை செய்யப்போவதாகவும் கூறி மிரட்டல் விடுத்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து மும்பை பொலிஸார், சைபர் குற்றப்பிரிவு பொலிஸாருடன் இணைந்து வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தினர்.



மிரட்டல் அழைப்பு, சத்தீஸ்கர் மாநிலம் ராய்பூரில் இருந்து, பைசல் கான் என்ற நபரின் தொலைபேசி எண்ணில் இருந்து வந்ததை கண்டறிந்தனர்.

இதன் தொடர்ச்சியாக ராய்ப்பூர் விரைந்த மும்பை பொலிஸார், ஷாருக்கானுக்கு கொலை மிரட்டல் விடுத்த ஃபைசல் கானை அவரது வீட்டில் வைத்து கைது செய்தனர்.

வழக்கறிஞரான பைசல் கான், ஷாருக்கானுக்கு தான் மிரட்டல் விடுக்கவில்லை என்றும் தனது கைப்பேசி கடந்த 2 ஆம் திகதி திருடப்பட்டதாகவும் கூறினார். தனது தொலைபேசியில் இருந்து மிரட்டல் விடுத்தது, தனக்கு எதிரான ஒரு பெரிய சதி என்றும் அவர் கூறி இருக்கிறார். தனது தொலைபேசி திருடப்பட்டதை அடுத்து பொலிஸில் தான் புகார் அளித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகராக மைக் வால்ட்ஸை நியமிக்கின்றார் டொனால்ட் ட்ரம்ப்



அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகராக மைக் வால்ட்ஸை நியமிக்க டொனால்ட் ட்ரம்ப் முடிவு செய்துள்ளார் என தகவல் வெளியாகியுள்ளது.

ட்ரம்ப்பின் விசுவாசியான மைக் வால்ட்ஸ் தீவிர சீன விமர்சகர் என்பது குறிப்பிடத்தக்கது.

அண்மையில் நடந்த அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் டொனால்ட் ட்ரம்ப் வரலாற்று வெற்றி பெற்றார். அவர் ஜனவரி 6 ஆம் திகதி அமெரிக்க ஜனாதிபதியாக பொறுப்பேற்றுக் கொள்கிறார். இந்நிலையில் புதிய அரசில் முக்கிய பதவியில் சிலரை நியமிக்க ட்ரம்ப் முடிவு செய்து வருகிறார்.

முன்னதாக, வெள்ளை மாளிகையின் முதல் பெண் தலைமை அதிகாரியாக சூசி வைல்ஸை அவர் நியமித்தது சர்வதேச கவனத்தைப் பெற்றது. 67 வயதான சூசி வைல்ஸ், அமெரிக்க அரசியல் ஆலோசகராக கடந்த 1979 இல் தனது பணியை தொடங்கியவர். 1980 இல் நடைபெற்ற அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் குடியரசுக் கட்சியின் வேட்பாளர் ரொனால்ட் ரீகன் உடன் இணைந்து பணியாற்றிய பெருமை கொண்டவர். தொடர்ந்து அரசியல் ஆலோசகராக பல்வேறு பணிகளை அவர் கவனித்து வந்தார்.

நடந்து முடிந்த அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் குடியரசுக் கட்சியின் வேட்பாளரான ட்ரம்ப்பின் தேர்தல் பிரச்சாரம் மற்றும் பரப்புரை சார்ந்த வியூகம் அமைக்கும் பணியை சூசி வைல்ஸ் நிர்வகித்தார். இந்நிலையில் தான் வெள்ளை மாளிகையின் முதல் பெண் தலைமை அதிகாரியாக சூசி வைல்ஸை ட்ரம்ப் நியமித்தார்.

அந்த வரிசையில் தற்போது, அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகராக மைக் வால்ட்ஸை நியமிக்க டொனால்ட் ட்ரம்ப் முடிவு செய்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. மைக் வால்ட்ஸ் ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரி. அமெரிக்காவின் பாதுகாப்பு தலைமையகமான பென்டகனில் ஆப்கானிஸ்தானுக்கான பாதுகாப்பு கொள்கை ஆலோசகராக பணியாற்றியுள்ளார். ட்ரம்பின் தீவிர ஆதரவாளர்.

மேலும் இவர் தீவிர சீன விமர்சகர் என்பது கவனிக்கத்தக்கது. அறிவுசார் சொத்துரிமை திருட்டு, நியாயமற்ற வர்த்தக நடைமுறைகள் மற்றும் அமெரிக்க விநியோகச் சங்கிலி பாதிப்புகளை சுரண்டுதல் போன்ற சீனாவின் பொருளாதார நடைமுறைகளை மைக் வால்ட்ஸ் விமர்சித்துள்ளார். சீன உற்பத்தி மீது அமெரிக்கா சார்ந்திருப்பதைக் குறைக்கும் மற்றும் அமெரிக்க தொழில்நுட்பத்தைப் பாதுகாக்கும் கொள்கைகளுக்காக அவர் தொடர்ந்து குரல் கொடுத்து வருகிறார்.




# உலகளாவிய தொற்றுநோய் நிலைமைகளை தடுக்கும் வகையிலான ஒப்பந்தம் கைச்சாத்து

உலக சுகாதார ஸ்தாபனத்தின் உறுப்பு நாடுகளுக்கு இடையிலான உலகளாவிய ஒப்பந்தத்தினை அடுத்த வருடம் கைச்சாத்திடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் காலங்களில் உலகளாவிய தொற்றுநோய் நிலைமைகளைத் தடுக்கும் வகையில், இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்படவுள்ளது.

இந்த ஒப்பந்தம் தொடர்பில் 2022ஆம் ஆண்டு கலந்துரையாடல்கள் ஆரம்பிக்கப்பட்டன.

அவற்றை அடுத்த வருடம் நிறைவு செய்து, ஒப்பந்தத்தைக் கைச்சாத்திடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கமைய, குறித்த ஒப்பந்தத்தினை அடுத்த ஆண்டு மே மாதம் கைச்சாத்திடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.



# சீனாவில் உடற்பயிற்சி செய்தவர்கள் மீது கார் மோதி விபத்து: 35 பேர் உயிரிழப்பு

சீனாவின் /ஹாய் நகரில் உள்ள மைதானம் ஒன்றின் முன் உடற்பயிற்சி செய்து கொண்டிருந்தவர்கள் மீது கார் ஒன்று வேகமாக மோதியதில் 35 பேர் உயிரிழந்தனர்.

மேலும் 43 பேர் காயமடைந்துள்ளனர் என வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

விபத்து ஏற்படுத்திய நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மேற்படி விபத்தையடுத்து அந்த விளையாட்டு மையம் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது

இந்தச் சம்பவம் குறித்து சீன அரசு ஊடகங்களில் தணிக்கை செய்யப்பட்ட காட்சிகளை ஒளிபரப்பான போதிலும் எக்ஸ் பக்கத்தில் வெளியான வீடியோக்களில் வீதிகளில் இறந்தவர்களின் உடல்கள் சிதறிக் கிடப்பதையும், மக்கள் உதவிக்காக கதறும் காட்சிகள் தெரிகின்றன.











# இன்றைய ராசி பலன்கள் - 13.11.2024

## மேஷம்

இன்றைய நாள் நீங்கள் விரும்பத் தக்கதாக இருக்கும். உங்கள் இலக்குகளை எளிதில் அடைவீர்கள். இன்று பயனுள்ள திட்டங்களை தீட்டுவீர்கள். அது உங்களுக்கு சாதகமான பலன்களைத் தரும்.

உங்கள் பணியில் சாதகமான பலன்கள் கிடைக்கும். அதிகப்படியான பண வரவு ஊக்கத்தொகையாக கிடைக்க வாய்ப்புள்ளது.

உங்கள் அன்பை உங்கள் துணையிடம் வெளிப்படுத்து வீர்கள். உறவில் நல்லிணக்கம் காணப்படும்.

இன்று பணம் சம்பாதிப்பதற்கான வலுவான அடித் தளத்தை அமைத்துக் கொள்வீர்கள். உங்கள் சேமிக்கும் ஆற்றல் அதிகரிக்கும்.

உங்களிடம் காணப்படும் உற்சாகமான மன ஆற்றல் காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

## ரிஷபம்

இன்றைய நாள் சுமூகமாகவும் வெற்றி கரமாகவும் அமைய நீங்கள் திட்டமிட்டு செயலாற்ற வேண்டும். உங்கள் புத்தி சாலித்தனத்தை பயன்படுத்த வேண்டும். ஸ்ரீலட்சுமி நரசிம்மரை வணங்குவதன் மூலம் மகிழ்ச்சி கிடைக்கும்.

இன்று உங்களுக்கு வெளியிலிருந்து ஊக்கம் கிடைக் காது. உங்களை நீங்களே ஊக்கப்படுத்திக் கொள்ள வேண்டும். திட்டமிட்டு செயலாற்றுவதன் மூலம் பணி களை குறித்த நேரத்திற்கும் முடிப்பீர்கள். எதிர்பாராத வகையில் வரும் பணிகளையும் முடிப்பீர்கள்.

உறவு என்று வரும் போது நீங்கள் அதனை லேசாக கையாள வேண்டும். அன்பும் புரிந்து கொள்ளுதலும் உறவை சிறப்பாக்கும்.

பண வரவு குறைந்து காணப்படும். தேவையற்ற செலவுகளை எதிர்கொள்ள நேரும்.

## மிதுனம்

இன்றைய நாள் பயனுள்ளதாக இருக்காது. என்றாலும் வருத்தப்படுவதை குறைத்துக் கொண்டு, உங்களுக்கு விருப்பமான விஷயங்களுக்காக நேரத் தையும் திறமையையும் பயன்படுத் துங்கள். தியானப் பயிற்சி சிறந்தது. குழப்பங்களுக்கு இடம் கொடாமல் தெளிவாக எண்ண வேண்டும்.

உங்கள் நாளை திட்டமிட்டு பணியாற்றுங்கள். பணி நிமித்தமான பயணம் காணப்படுகின்றது. உங்கள் அன்றாட பணிகளுடன் வேறு பணிகளையும் ஆற்று வீர்கள்.

உங்கள் உணர்சிகளை முறையாக கட்டுப்படுத்த வேண்டும். இதனால் உறவுப் பிணைப்பு பாதிக்கப்படும்.

இன்று அதிர்ஷ்டமான நிதிநிலைமை காணப்படாது. பணம் சம்பாதிக்கும் திறமையை வளர்த்துக் கொள்ளுங்கள். கண்டிப்பாக நல்லது நடக்கும்.

## கடகம்

இன்று உங்கள் முயற்சிகளில் வெற்றி உங்களுக்கு சாதகமாக அமையும் நாள். மிகவும் அற்புதமான நாள். உங்கள் முடி வெடுக்கும் திறமையில் முன்னேற்றம் காணப்படும். உங்களிடம் உறுதி காணப்படும்.

உங்கள் பணியைப் பொறுத்தவரை சிறப்பான நிலையில் இருப்பீர்கள். உங்கள் மேலதிகாரிகளின் அங்கீகாரம் கிடைக்கப்பெறுவீர்கள். உங்களுக்கு புதிய வாய்ப்புகள் கிடைக்கும்.

உங்கள் கருத்துக்களை உங்கள் துணையுடன் இனி மையான முறையில் பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் உறவில் நல்லிணக்கம் பராமரிக்கப்படும்.

நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்கும். உங்கள் சேமிப்பு நிலை உயரும்.

இன்று மொத்தத்தில் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

## சிம்மம்

எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக்கொள்ள வேண்டும். இன்று பொறுமை அவசியம். இன்று உங்கள் பொறுப்புகள் அதிகமாக காணப்படும்.

பணியிடத்தில் பரபரப்பு காணப்படும். திட்டமிட்டு முன்னுரிமைப்படி பணியாற் றினால் எல்லாப் பணிகளையும் எளிதாக முடிக்கலாம்.

ஒருவருக்கொருவர் பரஸ்பரம் அன்பை பரிமாறிக் கொள்வது, அதுவும் கஷ்ட நேரங்களில் பரிமாறிக் கொள்வது உறவில் மிகவும் அவசியம். அவர் விரும்பும் வகையில் நடந்து கொள்வது சிறந்தது.

சிறு கடன்கள் மூலம் உங்கள்அடிப்படை தேவை களை எளிதாக சமாளிக்கலாம். உங்களிடம் அதிக பணம் இல்லாவிட்டாலும் இருக்கும் பணத்தில் எப்படி வாழ வேண்டும் என்று அறிந்திருப்பீர்கள்.

உங்கள் உடல் நலத்தை சீர்படுத்தி இயல்பு நிலைக்கு கொண்டு வருவதற்கு பணம் செலவு செய்ய நேரலாம்.

## கன்னி

ஆன்மீக சொற்பொழிவுகள் கேட்டல் மற்றும் அடிக்கடி கோவிலுக்கு செல்வது மனதிற்கு ஆறுதல் தரும்.முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும். தியா னம் மேற்கொள்வது சிறந்த பலனைத் தரும்.

செயல்களை திட்டமிட வேண்டும் மற்றும் அதன்படி முடிக்க வேண்டும். அப்பொழுதான் அவை உங்கள் கட்டுப் பாட்டில் இருக்கும், தேவையற்ற செயல்கள் செய்வதை தவிர்க்க முடியும்.

உங்கள் துணையுடன் நல்லுறவு பராமரிப்பதில் கவனம் செலுத்த வேண்டும். உறவு சம்பந்தமான விருப்பு வெறுப்புகளைப் பற்றி உங்கள் துணையிடம் பேசி தெரிந்து கொள்ள வேண்டும். அதனால் நல்ல புரிந்துணர்வும் உறவுப் பிணைப்பில் வலுவும் ஏற்படும்.

## துலாம்

நீங்கள் அதிகப்படியாக செயலாற்றி னால் வெற்றியைக் காண நேரலாம். உங்களின் நகை மற்றும் விலை மதிப் புள்ள பொருட்களை பாதுகாத்துக் கொள்ள வேண்டும். எச்சரிக்கையாக இருப்பதன் மூலம் பாதகமான விளைவு களை தவிர்கலாம்.

இன்று நன்மை தீமை இரண்டும் கலந்து காணப்படும். நீங்கள் சாதாரணமாக செய்வதை விட இன்று கூடுதலாக செயல் பட வேண்டும். என்றாலும் திட்டமிட்டு செய லாற்றினால் நீங்கள் நன்மை காணலாம். பனியின் தரத்தில் கவனம் தேவை. வேலை தொடர்பான பயணம் காணப்படுகின்றது.

உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை மேற் கொள்ளுங்கள். உங்கள் அன்பும் அரவணைப்பும் உங்கள் இருவருக்குமான உறவை வளர்க்க உதவும்.

## விருச்சிகம்

இன்று இனிமையான சாதகமான நாள். இன்று நல்ல பலன்களைக் காண்பீர்கள். இன்றைய நாளை முறை யாக திட்டமிடவும். முக்கிய முடிவுகளை எடுக்கலாம்.

நீங்கள்எந்தப் பணி செய்தாலும் அதில் இன்று வெற்றி கானபீர்கள். உங்கள் பணி யைக் கண்டு உங்கள் மேலதிகாரிகள் பாராட்டுவார்கள்.

உங்கள் துணையுடன் பேசி அளவளாவுவீர்கள். இருவரும் ஒருவரையொருவர் நன்கு புரிந்து கொண்டு நடந்து கொள்வீர்கள். ஒருவரின் கருத்துக்கு மற்றவர் மதிப்பு அளிப்பீர்கள்.

பணம் அபரிமிதமாக காணப்படும். அதனை உங் களின் நலனுக்கு பயன்படுத்துவீர்கள். பணத்தை சிறந்த முறையில் செலவு செய்வீர்கள்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

# இன்றைய ராசி பலன்கள் - 13.11.2024


தனுசு

இன்று உங்களுக்கு சிறப்பான நாள். உங்கள் அக்கம் பக்கத்தவரின் ஆதரவு கிடைக்கும். இன்று அனைத்தும் சிறப் பாக நடக்கும். இன்று நல்ல பலன்கள் கிடைக்கும்.

உங்கள் மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். அவர்கள் உங்களை பாராட்டுவார்கள். உங்கள் கடின உழைப்பு மற்றும் திறமை வெளிச்சத் திற்கு வரும்.

உங்கள் துணையுடன் விருந்து விசேஷங்களில் கலந்து கொள்ள வேண்டிய நேரம். இதில் நீங்கள் பங்கு கொண்டு மகிழ்வீர்கள். உங்கள் துணையிடம் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்வீர்கள்.

வெளி நாட்டிலிருந்து பணம் கிடைக்க வாய்ப்புள்ளது. உங்களுக்கு தேவைப் படும் பொழுது அந்தப் பணம் கிடைக்கும்.


கும்பம்

இன்று சிறப்பான பலன்கள் கிடைக் காது. என்றாலும் அமைதியாக செயல் களை கையாண்டால் சரியாக செய லாற்றலாம். செயல்களை பொறு மையுடன் கையாளுங்கள்.

இன்று முன் கூட்டியே திட்டமிடலும் அதன்படி நடந்து கொள்வதும் கடினமாக இருக்கும். பணிகளை சரியான விதத்தில் கையாண்டால் சுமை குறைவாகத் தெரியும்.

உங்களுக்கும் உங்கள் துணைக்கும் இது மறக்க முடியாத நாளாக இருக்கும். இருவருக்கும் இடையே நல்ல பிணைப்பு ஏற்பட இருவரும் அனுசரித்து நடந்து கொள்வீர்கள். நல்ல வார்த்தைகளை பரிமாறிக் கொள் வதன் மூலம் இன்றைய நாளை சிறந்ததாக ஆக்கலாம்.

நீங்கள் சம்பாதிக்கும் பணத்தை விட அதிகம் பணம் இன்று உங்களுக்கு தேவையாக இருக்கும்.



மகரம்

இன்று இறை வழிபாட்டில் ஈடுபடுங் கள். முக்கிய முடிவுகள் எடுப்பதை வேறு ஒரு நாளைக்கு தள்ளிப்போடுங்கள்.

பணியிடத்தில் திட்டமிட்டு வேலை செய்தால் பலன் கிடைக்கும். உங்களின் நேர்மறையான அணுகுமுறை காரண மாக அதிகப் பணிகளையும் எளிதாக கையாள்வீர்கள்.

உங்கள் துணையிடம் பேசும் போது புரிந்துகொண்டு பொறுமையாக பேச வேண்டும். உங்கள் வார்த்தைகள் தவறாகப் புரிந்து கொள்ள வாய்ப்புளதால் கவன மாகப் பேச வேண்டும். உங்கள் துணையிடம் அன் பாகப் பழகுவதன் மூலம் நேர்மறையான விளைவுகள் காணலாம்.

நீங்கள் அதிகமாக செலவு செய்வீர்கள். ஆனால் சிறப்பாக திட்டமிட்டால் பணம் குறைவாக செலவு செய்யலாம். தேவையற்ற செலவுகளை தவிர்க்கவும்.


மீனம்

நீங்கள் மகிழ்ச்சியாக காணப்படு வீர்கள். இன்று முக்கிய முடிவுகளை எடுக்கலாம். இன்று அதிர்ஷ்டம் உங்கள் பக்கம் இருக்கும். வெற்றியின் உச்சத் திற்கு செல்வீர்கள்.

உங்கள் திறமைக்கு அங்கீகாரம் கிடைக்கும். உங்கள் முயற்சி பாராட்டைப் பெறும். உங்களுக்கு கொடுக்கப்பட்ட பணி சிறியதாக இருந்தாலும் அதனை மகிழ்வுடன் சிறந்த முறையில் செய்வீர்கள்.

இன்று உங்களுக்கும் உங்கள் துணைக்கும் மிகவும் இனிமையான மகிழ்ச்சியான நாள். இருவரும் ஒருவரோ டொருவர் நேரம் ஒதுக்கி கலந்து பேசலாம். அதே சமயத் தில் அமைதியைக் கையாள வேண்டும்.

இன்று கணிசமான பணம் சேமிப்பீர்கள். பங்கு வர்த்தகத்தின் மூலம் நல்ல பலன் கிடைக்கும்.



Discover the Ultimate Investment & Dynamic Destinations which Redefines the Face of Luxurious Living

OUR ONGOING PROJECTS
No.06, 19th Lane, Colombo 03.
No. 15A, Layards Rd, Colombo 04.
No.30, Hotel Road, Mount Lavinia.
No. 02, Glenfall Road, Nuwara Eliya.
No.01, Havelock Place, Colombo 05.
No. 34/2, De Saram Road, Mount Lavinia.
No. 358, High Level Road, Nugegoda.
No. 35, Ramakrishna Road, Colombo 06.



Blue Ocean GROUP OF COMPANIES
KELSEY HOMES 40 Years Housing Excellence
+94 777 546 546 | +94 770 774 774

LARGEST PROPERTY DEVELOPER IN SRI LANKA
No. 9A, De Fonseka Place, Colombo 04, Sri Lanka.

Northern PC Park
வடக்கின் கணினிப்பூங்கா



கணினி உலகில் நம்பகமான சேவையில் 15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
info@pcpark.co www.pcpark.co
Hot Line :- 077 777 1545
077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581
077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388
Northern Pc Park | Npcpark | northernpcpark | Northern PC Park